**B**

# முதல் திருப்புதல் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி சமூகஅறிவியல் மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்:

i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

ii) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்

குறிப்பு: இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளைக் கொண்டது.

### பகுதி - I

14×1=14

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்ட மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சியை எடுத்தவர் யார்?
அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பர்லின் இ) உட்ரோ வில்சன் ஈ) பால்டுவின்

2) பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்சு

3) "சத்யார்த்த பிரகாஷ்" எனும் நூலின் ஆசிரியர்
அ) சுவாமி தயானந்த சரஸ்வதி ஆ) ஆத்மராம் பாண்டுரங்
இ) அன்னி பெசன்ட் ஈ) தேவேந்திரநாத்

4) திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
அ) மருதுசகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
இ) வீரபாண்டி கட்டபொம்மன் ஈ) கோபால நாயக்கர்

5) உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்ட ஆண்டு
அ) 1827 ஆ) 1829 இ) 1826 ஈ) 1927

6) கூற்று: காங்கிரஸ் அமைச்சரவைகள் 1939-ஆம் ஆண்டு பதவி விலகின
காரணம்: காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு போரில் பங்கேற்றது
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை
ஆ) கூற்று சரியானது. ஆனால் காரணம் தவறானது
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

7) பழவேற்காடு ஏரி ______ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.
அ) மேற்குவங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
இ) ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்

8) இந்தியாவில அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலம்
அ) குஜராத் ஆ) சிக்கிம் இ) உத்திரப்பிரதேசம் ஈ) தமிழ்நாடு

9) பொன் புரட்சி எந்த வேளாண் பொருள் உற்பத்தியுன் தொடர்புடையது
அ) உருளைக்கிழங்கு ஆ) எண்ணெய் வித்துக்கள் இ) தேன் ஈ) சணல

10) கீழ்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?
அ) பாலக்காடு ஆ) செங்கோட்டை இ) போர்காட் ஈ) அச்சன் கோவில்

11) மக்மகான் எல்லைக்கோடு ______ நாடுகளுக்கிடையே உள்ள எல்லை ஆகும்
அ) பர்மா-இந்தியா ஆ) இந்தியா-சீனா இ) இந்தியா-பாகிஸ்தான் ஈ) இந்தியா-நேபாளம்

12) பேரிடர் அவசரகால தொலைபேசி எண்
அ) 1095 ஆ) 1944 இ) 1098 ஈ) 1077

13) ______ என்பது உடல்நலம் மற்றும் வளர்ச்சிக்கு தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல் முறையாகும்
அ) ஆரோக்கியம் ஆ) ஊட்டச்சத்து இ) சுகாதாரம் ஈ) பாதுகாப்பு

14) அந்திய செலாவணி மேலாண்மைச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு?
அ) 1999 ஆ) 2019 இ) 1992 ஈ) 2005

### பகுதி - II

குறிப்பு: ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண். 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10×2=20

15) முத்துத் துறைமுக நிகழ்வை விவரிக்கவும்.

16) முழுமையான சுயராஜ்ஜியம் என்றால் என்ன?

17) வாரிசு இழப்பு கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளை பட்டியலிடுக.

Scanned with CamScanner

18) மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
19) இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.
20) புயலுக்கு முன் வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது?
21) தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
22) தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்கு திட்டங்களின் பெயர்களை எழுதுக?
23) இந்தியாவின் செம்மொழிகள் யாவை?
24) உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள் யாவை?
25) பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவாதற்கான காரணங்களை குறிப்பிடுக?
26) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி பற்றி சிறுகுறிப்பு வரைக.
27) தமிழ்நாட்டிலுள்ள ஊட்டச்சத்து திட்டங்கள் எவையேனும் நான்கின் பெயரை எழுதுக?
28) நமது இந்திய நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள் யாவை?

## பகுதி - III

குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். 10×5=50
வினா எண். 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

29) கோடிட்ட இடங்களை நிரப்புக
i) கட்டபொம்மன் ________ என்ற இடத்தில் தூக்கிலடப்பட்டார்.
ii) அல்பைன் காடுகளில் காணப்படும் மரங்கள் ________ மரங்கள் என அழைக்கப்படுகின்றன
iii) சாத்தனூர் அணை ________ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
iv) இந்தியா தனது முதல் அணுகுண்டு சோதனையை நடத்திய இடம் ________
v) இரண்டாம் துறையை ________ துறை எனவும் அழைக்கலாம்.
30) வேலூரில் 1806-ல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக?
31) முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதிக்கவும்.
32) வேலுநாச்சியார் பற்றி விரிவாக விடையளிக்கவும்.
33) இமயமலையின் உட்பிரிவுகளையும், அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரிக்கவும்.
34) தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக?
35) நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக?
36) அ) வேறுபடுத்துக.
i) கடல் மீன்பிடித்தல் மற்றும் உள்நாட்டு மீன்பிடித்தல்
ii) மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்
ஆ) காரணம் கூறுக:
வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு
37) இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக?
38) உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக?
39) பொது விநியோக முறையை விவரிக்கவும்.
40) இரு நேர்முக மற்றும் இரு மறைமுக வரிகளை விளக்குக.
குறிப்பு: பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும், இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.
41) கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1900 முதல் 1920 வரையிலான ஆண்டுக்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42) இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.
i) பம்பாய் ii) தண்டி iii) மீரட் iv) சௌரிசௌரா v) கல்கத்தா

## பகுதி - IV

குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளி 2×8=16
43) அ) தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்க ஈ.வெ.ரா பெரியாரின் பங்களிப்பை மதிப்பீடு செய்யவும். (அல்லது)
ஆ) காந்தியடிகளின் சட்டமறுப்பு இயக்கத்தை பற்றி விவரிக்கவும்.
44) அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
i) எவரெஸ்ட் சிகரம் ii) காம்பே வளைகுடா iii) தார் பாலைவனம்
iv) வடகிழக்கு பருவக்காற்கு வீசும் திசை v) தேயிலை விளையும் பகுதி ஒன்று
vi) நிலக்கரி சுரங்கம் அமைந்துள்ள இடம் ஒன்று vii) கொச்சி viii) மலபார் கடற்கரை
(அல்லது)
ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
i) கன்னியாகுமரி ii) காபி விளையும் பகுதி ஒன்று iii) வைகை அணை
iv) வாகனத் தொழிலகங்கள் (ஒன்று) v) சேர்வராயன் மலை vi) எண்ணூர் துறைமுகம்
vii) மாங்குரோவ காடுகள் viii) தஞ்சாவூர்

****/****

Scanned with CamScanner